# கண்ணீர் அஞ்சலி



## திருமதி. கண்மணி கந்தையா

எங்கள் சொந்த மண்ணிலே பிறந்து
ஊரெழு என்ற நந்தவனத்திலே தவழ்ந்து
கந்தையா என்பவரை
கைப்பிடித்து வாழ்ந்த கண்மணியே!
தாங்கள் கண்மணி அல்ல
எம்மைப் பொறுத்தவரை பொன்மணி
பொன்னான நல்முத்துக்கள்
எழுவரை பெற்றெடுத்து
பிள்ளைகள் மேலோங்கிவாழ
காணக் கொடுத்துவைத்த பாக்கியவதி
பொன்னான மனதாலும்
பொறுமையுடன் பழகிய நட்பாலும்
விண்ணுலகம் சென்றீர் என்றதுமே
விறைத்தது ஊரவர்கள்
மனங்களெல்லாம் ஒரு கணமே
தாயென்றும், மாமியென்றும், பாட்டியென்றும்
உமை இழந்து தவிக்கும் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் படும் துன்ப துயரங்களிலும்
நாமும் பங்கு கொண்டு
உமது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
வாழ்க உமது நாமம்

**ஊரெழு மக்கள் ஒருங்கிணைப்புக் கழகம்**
**கனடா**